தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் ஏழாவது சட்டமன்றப் பேரவையின் ஆறாவது கூட்டத் தொடர்.

செவ்வாய்க்கிழமை, 1983 சனவரி 25.

தை 12, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்."

வாய் வழியாக வெளிப்படும் 'மெய்' எனச் சிறப்பித்துச் சொல்லப்படுவது எது என்றால், மற்றவர்க்குத் தீங்கு ஒரு சிறிதும் பயக்காத சொற்களைச் சொல்லுவதே ஆகும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்.

திரு. மு. அம்பிகாபதி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபையே இன்னும் ஆரம்பிக்கவில்லை, இதற்குள் பாயின்ட் ஆப் ஆர்டரா?

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் மத்தியில் கடுமையான கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள் முடிந்தவுடன் சொல்லுங்கள்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் 400 குடிசைகளைப் பிரித்துப் போட்டுவிட்டார்கள். வடித்து வைத்திருக்கிற சோற்றுப்பானைகளை உடைத்து விட்டார்கள். மக்கள் தாங்க முடியாத துன்பத்தால் அழுது கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீரென்று இத்தகைய பிரச்சனைகளை எழுப்பக் கூடாது.

128—261—1

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். பேரவை முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் இந்த பிரச்சனையை எழுப்பினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றம் என்றால் இங்கு எல்லோரும் தான் இருப்பார்கள்.

2. இரங்கற் குறிப்புகள்.

(அ) முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் வி. கே. கண்ணன், ஏ. வேலு, கே. கஜபதி ரெட்டியார், ஆச்சார்யா வினோபாபாவே ஆகியோர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. வி. கே. கண்ணன் அவர்கள் 30-8-1982 அன்றும், திரு. ஏ. வேலு அவர்கள் 24-11-1982 அன்றும், திரு. கே. கஜபதி ரெட்டியார் அவர்கள் 15-12-1982 அன்றும், மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கண்ணன் அவர்கள் 1952 ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டம் ஆரணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1957 ஆம் ஆண்டு வரை பேரவையில் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஏ. வேலு அவர்கள் 1952 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை ரிசர்வ் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1957 ஆம் ஆண்டு வரை பேரவையில் நல்ல முறையில் பணியாற்றி உள்ளார்.

திரு. கே. கஜபதி ரெட்டியார் அவர்கள் 1952 ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரி பொதுத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1957 ஆம் ஆண்டு வரை பேரவையில் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வோதய இயக்கம், மற்றும் பூதான இயக்கம் ஆகியவற்றைத் தோற்றுவித்தவரும், மகாத்மா காந்தியடிகளின் ஆன்மீக வாரிசாக விளங்கியவருமான ஆசார்ய வினோபா பாவே அவர்கள் 15-11-1982 அன்று மறைந்ததை இப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.